<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 35/2021and14,15,17,18,22,23,29,36/2021 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.ரமணா | | | |
| **Date** | **:** | **06.05.2025** | | | |
| **Time** | **:** | 11.59 **a.m to 12.28 p.m** | | | |

<u>நி.த.சா.**1** திரு. ரமணா என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எங்களுடைய சான்றிட்ட நிலையாணை 3(h) முன்னிலைக்கு பயிற்சியாளர்கள், தகுதிகாண்பருவத்தினர் ஆகியோரும் தொழிலாளர்கள் என்றால் ஆமாம். 3(l) முன்னிலைக்கு அனைவருக்கும் வருகை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றால் ஆமாம். நிலையாணைபடி பயிற்சி காலம் மூன்று ஆண்டுகள் வரை இருக்கலாம் என்றால் ஆமாம். தகுதிகாண் பருவம் ஒரு வருடம் வரை இருக்கலாம் என்றால் ஆமாம். நி.சா.ஆ.2 நியமன உத்தரவில் பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மூன்று வருடங்கள் தேவையில்லை இரண்டு வருடங்கள் போதுமானது என நினைத்துதான் இரண்டு ஆண்டுகள் மட்டும் பயிற்சி காலம் என சொல்லப்பட்டது என்றால் ஆமாம். நி.சா.ஆ.2 பணி நியமன உத்தரவு முன்னிலைக்கு உண்மையில் பயிற்சி கொடுக்கப்பட்டது என்றால்

ஆமாம். நி.சா.ஆ.3 முன்னிலைக்கு இரண்டு வருடம் பயிற்சி காலம் முடிந்தவுடன் மறு தினத்திலிருந்து பணி நியமனம் செய்யப்பட்டார்கள் என்றால் ஆமாம். தகுதிகாண் பருவ நிலையில் வைக்கப்பட்டார்கள். டெக்னீஷனாக வேலையில் வைக்கப்பட்டார் என்றால் ஆமாம். இரண்டு ஆண்டுகள் அவருக்கு உற்பத்தி துறையில் பயிற்சி வழங்கப்பட்டது என்றால் ஆமாம். எனவே புதிதாக அவருக்கு தகுதியை காண வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தகுதிக்காண் பருவ நிலையில் அவருக்கு என்று குறிப்பிட்ட ஒரு வேலை ஒதுக்கப்பட்டு அந்த வேலையில் அவர் எவ்வாறு செயல்படுகிறார் என ஆய்வு செய்யப்படும். பயிற்சி காலம் திருப்திகரமாக இருந்த காரணத்தினால் தான் அவருக்கு டெக்னீசனாக பணி நியமனம் வழங்கப்பட்டது என்றாலும் அவ்வாறு இருக்கும் பொழுது அவருடைய பணி காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்றால் தவறு. பயிற்சி காலத்தில் பயிற்சி மட்டுமே வழங்கப்பட்டது. தகுதிக்காண் பருவ நிலையில் தான் அவருடைய செயல்பாடு ஆய்வு செய்யப்படும். அட்டவணை ஐந்து, item 5 a,b படி தொழிலாளர் விரோத போக்கில் ஈடுபட்டு தான் பணிநீக்கம் செய்தோம் என்றால் தவறு. மனுதாரர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகு தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாக சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அதற்கு ஆதாரம் இல்லாத காரணத்தினால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் சாட்சியம் பத்தி 17ல் சொல்லி உள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. 12.08.2019 தேதியிட்ட அறிவிப்பு

கொடுக்கப்பட்டு 26.8.2019 முதல் நீண்ட வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்பட்டது என்றால் ஆமாம். ஆனால் வேலை நிறுத்தத்தில் அனைத்து தொழிலாளர்களும் பங்கேற்கவில்லை. 10.08.2019 அன்று தொழிற்தாவா தொழிலாளர் ஆணையரிடம் தாக்கல் செய்யப்பட்டு 01.01.2019 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.18000/- கொடுக்க வேண்டும் என ஊதியம் உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். நீதிமன்ற தடையாணை உத்தரவு முன்னிலைக்கு 01.01.2024 முதல் மாதம் ஒன்றுக்கு 8000/- ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது என்றால் பணியில் இருக்கும் தொழிலாளர்களுக்கு அவ்வாறு வழங்கப்பட்டு வருகிறது. 26.8.2019 தேதி முதல் வழக்கில் சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்றால் அவ்வாறு அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை. 26.8.2019 அன்று மனுதாரர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு மறுநாள் 27.8.2019 முதல் அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்கும் பணி நீக்க உத்தரவிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. மனுதாரர்கள் அனைவருக்கும் ஒரே விதமாக அவர்களின் செயல் திறன் சரியில்லை என தெரிவித்து பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் செயல் திறன் சரியில்லை என்ற காரணத்திற்காக தான் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அனுமதி இல்லாமல் விடுப்பில் இருந்த காரணத்தினாலும் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அனுமதி இல்லாமல் விடுப்பு எடுத்ததற்கு ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் கடிதம் ஏன் வரவில்லை என

கேட்டு அனுப்பப்பட்டது. அதை தாக்கல் செய்யவில்லை. தொழிற் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்த போது அனைத்து தொழிலாளர்களின் Performance Appraisal தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். மனுதாரர்களின் Performance Appraisal தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவர்களின் செயல் திறன் திருப்தியாக இருந்த காரணத்தினால் தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. எங்கள் நிர்வாகத்திற்கு மனுதாரர்கள் அந்த சமயத்தில் தொழிலாளர்கள் மிகையாக இருந்த காரணத்தினால் தேவைப்படவில்லை. மிகை தொழிலாளர்கள் இருந்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை உற்பத்தி குறைவாக இருந்த காரணத்தினால் கூடுதலான தொழிலாளர்கள் தேவைப்படவில்லை. உற்பத்தி குறைவாக இருந்த காரணத்தினால் தான் ஆட்குறைப்பு செய்யப்பட்டதா என்றால் இல்லை செயல் திறன் திருப்தியாக இல்லாத காரணத்தினால் ஆட்குறைப்பு செய்யப்பட்டது. 25 G and 25 F புறம்பாக நிர்வாகம் ஆட்குறைப்பு செய்துள்ளது என்றால் இல்லை. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 51 தொழிலாளர்களின் பணி நீக்கத்திற்கு எதிராக ஒப்புதல் கேட்கப்பட்டு அது மறுக்கப்பட்டு விட்டது என்றால் இல்லை. சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 46 தொழிலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றால் ஆமாம். ஒப்புதல் வழங்காததற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் ஆமாம். அந்த உத்தரவில் ஒப்புதல் வழங்காமல் நிராகரிக்கப்பட்டது சரி என்றும் பணி நீக்கம் செய்யப்பட்டது ரத்து செய்யப்படுகிறது என்றும்

தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் ஆமாம். எங்கள் நிர்வாகத்தில் அதன் பின்னர் வந்த ஒவ்வொரு வருடமும் நிர்வாகமானது லாபத்துடன் செயல்பட்டு வந்தது என்றாலும் அது சம்பந்தமாக எங்கள் நிர்வாகத்தின் விளம்பரத்திலும் கூட தெரிவிக்கப்பட்டு வருகிறது என்றாலும் ஒட்டுமொத்த நிர்வாகத்தின் லாபத்தை கணக்கில் எடுத்துக் கொள்வது இந்த வழக்குக்கு ஒத்து வராது. எங்கள் கம்பெனியில் பேலன்ஸ் ஷீட் முன்னிலைக்கு வருவாய் மற்றும் லாபம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்றால் வேறு வருமானங்களை சேர்த்து உயர்ந்துள்ளது. மனுதாரர்களை தகுதிக்காண் பருவத்தில் வைத்தது தகுதிக்காண் பருவத்தை நீட்டித்தது அவர்களின் பணியை நீக்கம் செய்தது ஆகியவை நியாயமான காரணத்திற்காக இல்லை என்றால் தவறு. 26.8.2019 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்கு பதிலடியாக தான் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் இல்லை. விசாரணை இல்லாமலும் நியாயமான காரணம் இல்லாமல் பணி நீக்கம் செய்யப்பட்டது தவறு என்றால் சரியல்ல. செயல் திறன் சரியில்லாததால் தான் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். மனுதாரர்களுக்கு வேலை வழங்க தயாராக இருக்கிறோமா என்றால் இல்லை. மனுதாரர்கள் ஆதாய பணியில் இருப்பதாக சொல்வதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அது சம்பந்தப்பட்ட சாட்சியம் தவறானது என்றாலும் சரியல்ல. பணி நியமன உத்தரவில் சொல்லப்பட்டுள்ள பணிக்காலம் முடிவதற்கு முன்னரே பணிநீக்கம் செய்தது சட்டத்திற்கு

புறம்பானது என்றால் இல்லை. மனுதாரர்கள் மனுப்படி பரிகாரம் கிடைக்க தகுதியுடையவர்கள் என்றால் தவறு.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.05.07 12:46:54 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.05.2025.